𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலிஷ்மீ ௩௰.௨ தோறும் சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்.

[illegible]-௧] ௧௮௮௬ ௵ [illegible] ௴ ௩௰௨ [௫ | புத்தகம்-௧] ௧௮௮௬ ௵ ஆகஸ்டு ௴ ௩0௨ [இலக்கம்-௩

𑌭𑌰𑌤𑌖𑌣𑍍𑌡𑌸𑍍𑌯					𑌲𑌙𑍍𑌕𑌾𑌯𑌾𑌃	
𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌸𑍍𑌯	௧	௰௨	,,	௨	௪	,,
𑌮𑌾𑌸𑌷𑌟𑍍𑌕𑌸𑍍𑌯	௧	,,	,,	௧	௪	,,
𑌮𑌾𑌸𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌯	,,	௯	,,	,,	௰	,,
𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌯𑌾𑌃	,,	௩	௬	,,	௪	,,

[illegible]
[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾

𑌗𑍀𑌰𑍍𑌵𑌾𑌣𑌭𑌾𑌷𑌾. ([illegible])

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

சந்தா விவரம்.

		இந்தியாவிற்கு.			இலங்கைக்கு.		
௵	1-இ	1	12	0	2	4	0
௴	6-இ	1	0	0	1	4	0
௴	3-இ	0	9	0	0	10	0
காபி	1-இ	0	3	6	0	4	0

இவ்வடமொழிப் பத்திரிகையை வைதிக லௌகிக இருதிறத்தாரும் வாங்க விரும்புகின்றனராதலின் இதன் சந்தாவைக் குறைக்கப்பட்டிருக்கின்றது.

ப்ரம்மவித்தியா.

ஸம்ஸ்கிருத பாஷை (தொடர்ச்சி)

அவற்றுள் சில ஈசம், கேனம், கடம் முதலிய உபநிடதங்கள் அந்தந்த மத பாஷியக்காரர்களால் வியாக்கியானம் செய்யப்பெற்றுள்ளன. அந்தந்த மதஸ்தர்கள் அவரவர்கள் கொண்டமதமே எல்லா உபநிடதங்களிலும் உள்ளதெனக்கூறினும், பாரபக்ஷமின்றிப்பார்க்கும்புலவர்க்கு ஒருவிதமான கொள்கையே அவற்றுள் உள்ளதென வெள்ளென விளங்கும். அங்ஙனமன்றே ஒவ்வொருமதங்களுக்கும் ஒவ்வொரு உபநிடதம் இடங்கொடுக்கும். அந்தந்த உபநிடதங்களை மூலமாய்க்கொண்டு மற்றைய வாக்கியங்களையும் தமது கருத்திற்கிணங்கப் பொருள்படுத்தமுயல்வது மதவாதிகளின் வழக்கம். அவர் செய்யும் முயற்சி சில்விடத்து முற்றுப்பெறும். சிலவிடத்து முயற்சி வீணாகுமேல் விதண்டாவாதம் செய்வதுமுண்டு. இதுவும் மதவாதிகட்கியல்பே. மற்றுமுள்ள கற்றவரோ பொருமையையொழித்து எல்லாவற்றிலும் சமரச புத்திகொண்டு கண்டபடி பதங்களை வருத்தாது, அவ்வப்பதங்களுக்கு உரிய பொருள்களைக்கொண்டு தத்துவங்களை நன்கு ஆராய்ந்து ஆனந்தக்களிப்புடன் எக்காலமும் கைவிடாது இவ்வுபநிடதங்களைக் காத்து வருகின்றனர். அதுகொண்டு ஓர் மதவாதி சொல்லும்வழி சேராது, அவ்வுபநிடதங்களுக்கு முக்கியமான பொருள்போனவழி விஷயங்களை எடுத்து பொதுவிற் சங்கதி தெரிந்துகொள்ளவேண்டியதின் நிமித்தம், இவ்விடம் எழுதவேண்டியதொன்றே நமது கடமையாதலில் சிறுபான

𑌬𑌾𑌲- 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌬𑍍𑌰𑌹𑍍𑌮- 𑌰𑍁𑌦𑍍𑌰𑌹𑍃𑌦𑌯- 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿- 𑌶𑌰𑌭- 𑌅𑌥𑌰𑍍𑌵 𑌶𑌿𑌰𑌶𑍍𑌶𑌿𑌖𑌾- 𑌦𑌰𑍍𑌶𑌨- 𑌭𑌸𑍍𑌮𑌜𑌾𑌬𑌾𑌲- 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷- 𑌵𑌰𑌾𑌹- 𑌪𑌞𑍍𑌚𑌬𑍍𑌰𑌹𑍍𑌮- 𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯- 𑌮𑍈𑌤𑍍𑌰𑌾𑌯𑌣𑍀- 𑌤𑍍𑌰𑌿𑌶𑌿𑌖𑌿𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣- 𑌮𑍈𑌤𑍍𑌰𑍇𑌯𑌤𑍇𑌜𑍋𑌬𑌿𑌨𑍍𑌦𑍁- 𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑌃- 𑌪𑌰𑌶𑌿𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌃- [illegible] 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣- 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌤𑌾𑌪𑌨𑍀𑌦𑍍𑌵𑌯- 𑌰𑌾𑌮𑌤𑌾𑌪𑌨𑍀𑌦𑍍𑌵𑌯- 𑌤𑌾𑌰𑌸𑌾𑌰- 𑌹𑌯𑌗𑍍𑌰𑍀𑌵- 𑌕𑍃𑌷𑍍𑌣- 𑌕𑌲𑌿𑌸𑌨𑍍𑌤𑌰𑌣- 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌹𑌾𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌰𑌾𑌮𑌰𑌹𑌸𑍍𑌯- 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵- 𑌮𑍁𑌦𑍍𑌗𑌲- [illegible] 𑌶𑌾𑌣𑍍𑌡𑌿𑌲𑍍𑌯- 𑌗𑍋𑌪𑌾𑌲𑌤𑌾𑌪𑌿𑌨𑍀- 𑌮𑌹𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑌃- 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌶𑌸𑍍𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌕𑌾𑌃- 𑌤𑌥𑌾- 𑌅𑌮𑍃𑌤𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌃 𑌨𑌾𑌦- 𑌨𑌾𑌦𑌬𑌿𑌨𑍍𑌦𑍁- 𑌧𑍍𑌯𑌾𑌨𑌬𑌿𑌨𑍍𑌦𑍁- 𑌯𑍋𑌗𑌤𑌤𑍍𑌤𑍍𑌵- 𑌯𑍋𑌗𑌚𑍂𑌡𑌾𑌮𑌣𑌿- 𑌯𑍋𑌗𑌶𑌿𑌖𑌾- 𑌮𑌣𑍍𑌡𑌲𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑌃- 𑌯𑍋𑌗𑌮𑌾𑌰𑍍𑌗𑌤𑌦𑍁𑌪𑌯𑍁𑌕𑍍𑌤𑌨𑌾𑌡𑍀𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌪𑍍𑌰𑌵𑍀𑌣𑌾𑌃- 𑌨𑌿𑌰𑌾𑌲𑌮𑍍𑌬𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑌃- 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌵𑌨𑌪𑌰𑌾𑌃- 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌾𑌤𑌪𑌨- 𑌦𑍇𑌵𑍀- 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌾- 𑌭𑌾𑌵𑌨𑌾𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑌃- 𑌪𑌰𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌕𑌾𑌃 𑌸𑍀𑌤𑌾𑌸𑍌𑌭𑌾𑌗𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌃- 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌃- 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍍𑌯𑌮𑍃𑌤𑌬𑌿𑌨𑍍𑌦𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌾𑌃- 𑌵𑌾𑌕𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵 [illegible] 𑌗𑌰𑍍𑌭𑌶𑌾𑌰𑍀𑌰𑌕𑌾𑌦𑍍𑌯𑌾𑌃- 𑌶𑌾𑌰𑍀𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌬𑍋𑌧𑌕𑌾𑌃- 𑌅𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁- 𑌏𑌵 [illegible] 𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌤𑌾𑌸𑌾𑌂 [illegible] 𑌏𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌤𑌨𑍍𑌮𑍂𑌲𑌾𑌨𑍀𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌾𑌪𑌿 𑌵𑌿𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑌾- 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌬𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 [illegible]

𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌨𑌿𑌷𑌤𑍍

[illegible]

[illegible]

மை எழுதுவாம். அவற்றுள் ஈசம், கேனம் முதலிய சில உபநிடதங்கள் ஒருவகை சாயாது, ஒரு மூர்த்தியைப் பற்றாதுநின்று, நடுநிலைமையாய்த் தத்துவங்களைக் காட்டுவன. மற்றும் கைவல்லியம், ஜாபாலம், சுவேதாச்சுவதரம்,, காலாக்கினிருத்திரம், பிரஹ்மஜ்ஜாபாலம், பாசுபதப்பிரமம், உருத்திரகஸியம், தக்ஷிணாமூர்த்தி, சரபம், அதர்வசிரசு, அதர்வசிகை, தரிசனம், பஸ்மஜாபாலம், உருத்திராக்ஷஜாபாலம், வராகம், பஞ்சப்பிரமம், மாண்டூக்கியம், மைத்திராயணி, திருசிகிப்பிராமணம், மைத்திரேயம், தெஜோபிந்து, முதலிய சில உபநிடதங்கள் சிவபிரானது மகிமையை நன்கு விளக்கி அவரையே பரதத்துவமாய்க் கூறுகின்றன. அங்ஙனமே சுபாலம், நாராயணம், நரசிம்மபூர்வதாபினி, நரசிம்மஉத்தரதாபினி, இராமபூர்வதாபினி, இராமோத்தரதாபினி, தாரசாரம், ஹயக்கிரீவம், கிருஷ்ணம், கலிசந்தரணம்,திருபாத்விபூதிமகாநாராயணம், ராமரகசியம், வாசுதேவம், முத்கலம், சாண்டில்லியம், பைங்கலம், கோபாலதாபினி, மகோபநிடதம் முதலிய சில உபநிடதங்கள் ஸ்ரீமத் புருடோத்தமனது பெருமையை விரிக்கின்றன. அமிர்தபிந்து, நாதபிந்து, தியானபிந்து, யோகதத்துவம், யோகசூடாமணி, யோகசிகை, மண்டலப்பிராமணம் எனத்தொடங்கிய சில உபநிடதங்கள் யோகமார்க்கத்தையும், அதற்குவேண்டிய நாடிவிளக்கம் முதலிய பலவழிகளையும் நன்கு எளியநடையில் எடுத்துரைக்கும். நிராலம்பம் முதலிய சிலவற்றில் சந்நியாசமும், அதன் பிரயோசனமும், அதை நடத்தும் வழிகளும் சொல்லப்பட்டுள்ளன. திரிபுராதபனம், தேவி, திரிபுரா, பாவனை, முதலியவுபநிடதங்களில் பராசத்தியெனப்பெயர்கொண்ட ப்ரம்மவித்தையின் பெருமையைக் காணலாம். சீதை,சௌபாக்கியலக்ஷுமி முதலியன திருமாலின் திருமார்பணியாய திருப்பாற்கடல்மகளைத் துதிக்கும். சரஸ்வதி, அமிர்தபிந்து என்று தொடங்கியசிலவற்றிற் சத்தத்தின் தத்துவத்தையும்,சரஸ்வதியின் பரத்துவத்தையும்நன்கறியக்கூடும். கெற்பம்,சாரீரம் முதலியவுபநிடதங்களில் உடற்கூறுகளும், அவற்றுள் மிக நுட்பமான அநேக சங்கதிகளும் எழுதப்பட்டிருக்கின்றன. மற்ற அநேக உபநிடதங்கள் நாம் அறியவேண்டிய பற்பல முக்கிய காரியங்களைக்காட்டும் கருவியாய் நின்றுள்ளன. அவைகளை ஆராயுங்கால் சாஸ்திரங்களெல்லாம் அவைகளை மூலமாகக்கொண்டனவென்பதற்குச் சிறிதும் தடையில்லை. அவைகள் அநேகங்களாதலாலும், அவைகளின் நடை பலவிதம்பொருந்தியுள்ளனவாதலாலும், அவற்றின்பொருள் சிலவிடத்து நன்கு விளங்காததுகொண்டும், ஒவ்வொருவர் தத்தம் மனதுபோனவழி தாறுமாறாய் அர்த்தஞ்செய்து அவற்றிற்குள்ள கருத்தைக்கெடுத்துவிடுவார்களென்றெண்ணி, எல்லாம் அறிந்த பிரமதேவன் அவற்றின் பொருள்களை நன்கு உணர்த்துவதின்பொருட்டுப் புராணங்களையும், அவ்வுபநிடதங்களிலும், மேலும் கன்ம காண்டங்களிலும் சொல்லப்பட்டுள்ள சத்கர்மங்களை எடுத்துரைக்க தர்மநூற்களையும் இயற்றினர். பின்பு காலவேறுபாட்டால் அந்நூற்கள் சிதறிப்போனதுகண்டு, பிற்காலத்திற்பிறந்த வேதவியாசர், மனு முதலிய மகாரிஷிகள் அவற்றையனுசரித்துப் பதினெண் புராணங்களையும், அத்தொகைகொண்ட ஸ்மிருதிகளையும், மற்றும சிலர் உப புராணங்களையும், உபஸ்மிருதிகளையும் உலோகோபகாரார்த்தமாய் அருளிச்செய்தனர்.

இன்னும் வரும்.

[illegible]

[illegible]

𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌿𑌕𑌵𑌾𑌂𑌮𑌯𑌾𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑍀

[illegible]

[illegible]

உபந்நியாஸ சங்கிரகம்.

ஸ்ரீமத் சைவசமாஜத்தின் ௯-வது வருஷபூர்த்தி மகோற்சவத்தில் திருச்சிராப்பள்ளி டவுன்ஹாலில், சிதம்பரம் **ப்ரம்மவித்தியா பத்திராதிபரும்**, மன்னார்குடியில் விளங்கும் வித்துவசிரோமணிகளான ஸ்ரீமத் ராஜுதீக்ஷிதரவர்கள் மாணுக்கருள் ஒருவருமான கும்பகோணம் ப்ரம்மஸ்ரீ **ஸ்ரீ நிவாச சாஸ்திரிகள்** செய்த உபந்நியாச சங்கிரகம்.

கனவான்களே!

இப்பொழுது தற்கால நாகரீகம் கொண்டும், அதற்கேற்ற நூற்களைக்கற்றும்; பழையகாலத்து நாகரீகம் கொண்டும், அதற்கிசைந்த நூற்களைக்கற்றும் உள்ள அநேகர் இச்சபையில் நிறைந்திருக்கக்கூடும். ஆனல் அவர்கள் அறியாத சங்கதி ஒன்றெடுத்துரைக்க நான் இவ்விடம் வந்தேனன்று. இவ்விருதிறத்தாரும் ஒருவருடன் மற்றொருவர் சேராதிருப்பது நமது தேச ஜாதி மதங்களுக்குப் பலக்குறைவென்றெண்ணி விரித்துக்காட்டவே. அஃது யாதெனில்! நமது தேசத்தில் வெகு காலமாய் மேற்கு ராச்சியங்களிலுள்ளவர் மிருகத்தன்மையை விடுவதற்கு முன்னரே நமது முன்னோர் நாகரீகம் நன்கு பெற்றும், நாத்திகத்தையொழித்தும், நன்கு பொருள்களை ஆராய்ந்து பல நூற்களை இயற்றி, உலகம் நிலைபெறச் செய்தனரென்பதுதான் நமக்குப் பெரும்புகழ். அக்காலத்திலேயே நமது மதஜாதிகளின் பிரமாணசாஸ்திரங்களான அநேக உபநிடதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், நீதிசாஸ்திரங்கள், இன்னும் பற்பல நூற்கள் பூர்ணமாய் இருக்க, அவற்றின் வழிகளைக்காட்டிவந்தவர் நமது சுதேச பண்டிதர்களல்லவா? தற்காலம் அவர்களை ஒரு கூட்டத்திலும் சேர்க்காது அவரவர் தமக்குத் தோன்றியபடி செய்வதும், அதற்குத் தடைசொல்லும் வித்துவான்களைத் தாங்கள் படித்தபாஷையில், அல்லது தேசபாஷையிற் காரணங்களை எடுத்துச்சொல்லவும் வருத்திப் பலவிதம் உபத்திரவஞ்செய்கின்றனர். அவர்கள் வெகுகாலம் கீர்வாணபாஷையிற்பயின்றிருப்பினும், வேறு பாஷைகளிற் சிறிதேனும் அறியார். இக்காலத்தவர் படிக்கும்பொழுதே இருபாஷைகளைக் கற்றவராயினும், இவராலும் தாமறிந்த இங்கிலீஷ்பாஷையிலுள்ள சிற்சில சொற்களுக்குத் தமிழ்சொல்லமுடியாது, அந்தப் பதங்களையே உபயோகிக்க நாம் கண்டதுண்டு. இங்ஙனமிருக்க அவர் எப்படி எடுத்துரைப்பர். இவர்கள் ஆரியர்குலத்திற் பிறந்து அவரது குலதனமான பாஷையைக் கைவிட்டதுமன்றி, அதைக் கற்றவரையும் அவமதிப்பரேல் இதைவிட இவர்களுக்குப் புத்திகுறைவு யாதிருக்கின்றது. இதுநிற்க- நமதுதேசம் வெகு காலமாய் ஐகமத்தியத்திலேயே கட்டுண்டது. ஐகமத்தியம் என்னும் பதம் இரண்டு பொருள் கொடுக்கும். அதாவது ஒற்றுமை, ஒருமதம் கொள்ளல்; அதுவே நம்முன்னோருக்குரிய தனம். அவ்வைகமத்தியம் எக்காலவரையில் நமதுதேசத்தில் நிரம்பியிருந்ததோ அதுவரையில் நமது ராஜ்ஜியம் பிறர்வசமாகாமலும், எல்லாத்தொழில்களும் ஒவ்வொரு ஜாதியார் நடத்த நிலைபெற்று வந்தன. பிராமணர்கள் படிப்பதும், அரசர் இராணுவத்தொழில் முதலியவற்றைச் செய்வதும், வைசியர் வியாபாரம் கொள்வதும், மற்றைய கைத்தொழில்களை மற்றவரும் செய்துவந்தனர். அங்ஙனம் மனு([illegible]) என்றுரைத்தபடி ஒவ்வொரு சமயத்துக்கு ஒவ்வொருவர் மற்றவர் தொழிலைக் கொள்வதும் உண்டு

[illegible]

அதுகொண்டே மிருச்சகடிகம் ([illegible])என்னும் நாடகத்தில், ஓர் பிராமணர் வியாபாரம்செய்தாரென்று முற்காலத்துக் கவிகளில் ஒருவரான சூத்திரகம்காராஜா என்பவர் எழுதியிருக்கிறார். இவையெல்லாவற்றிற்கும் காரணம் ஐகமத்தியம் அல்லவா? அவ்வைகமத்தியம் மதமூலமாதலால் மதத்தைக் காக்கவேண்டியது அவசியம். இங்ஙனமிருக்க நமது மதத்திற்கு முதல் எதிரி நாத்திகரும், பிறகு மற்றைய மதஸ்தருமாதல்பற்றி, அவர்கள் சொல்லும் சொற்களையும், அவர்கள் எழுதும் நூற்களையும், அப்புத்தகங்கள் நன்கு கட்டுண்டு, வெகு விநோதமான பொன்னீர் பூச்சுக்களுடன் இருப்பதையுங் கண்டு மகிழும் சிலரை நோக்கி, அவற்றிலுள்ள யுக்தி விரோதத்தையும், நமது சுதேச பண்டிதர்கள் கையில் இருப்பது பழம் பனையேடாயினும், அவற்றில் உள்ள வழுவற்ற நியாயங்களையும் எடுத்துரைத்து நன்கு விளக்கி நம்மவர்க்குச்சொல்லி, அவர்களை நமது தேச பண்டிதர்களுடன் சேர்த்து, இதராதிகளை எவ்விதத்திலும் விலக்கவேண்டியது அவசியமன்றோ? (களிப்பு) இங்ஙனமிருக்க நமது தேசத்திவ்வழங்கிவரும் பற்பல உள்மதங்களைக்கொண்டு சண்டைசெய்து மூன்றாவது மதத்திற்கு இடங்கொடுப்பது மிகவும் நமக்கு அவமானம். பாருங்கள்! நமது சுதேசிகள் பாடசாலைகளில் மதபோதனம் செய்யவேண்டுமானால் அத்துவிதம் சொல்லுவதா, விசிஷ்டாத்துவிதம் சொல்லுவதா, துவிதம் சொல்வதா என்று ஐயமுற்று, முற்றிலும் தமது சொந்தவழியை விட்டு, கிறிஸ்தவர் பாடசாலைகளில் அவர் மதத்தைப் படிப்பிக்கப் பிள்ளைகளை அனுப்புவது, இரண்டு சகோதரர்கள் சொத்துக்குச் சண்டைசெய்து முற்றிலும் விற்றுப் பணத்தை இராஜாங்கத்தாருக்குச் சேர்த்துக்கொடுத்து, இருவரும் பின்பு சத்திரம்தேடுவதுபோல ஆகின்றது. (களிப்பு) ஐயா! பேனுக்குப்பயந்து தலைமொட்டையடிக்கலாமா? வெளியோரிடம் விவாதம்செய்யுங்கால் நம்மவர் உள்ளுக்குள் உள்ள மதத்துவேஷத்தைவிட்டு மற்றவர்களை வெல்லவேண்டியது அவசியம். அங்ஙனம் மாபாரதம் ஆரணிய பர்வத்தில், தம்மை அவமதிக்க முயன்ற துரியோதனனுக்குக் கந்தருவர்களால் நேர்ந்த அவமானத்தை விலக்கக் கருதி, தமது தம்பியரை நோக்கித் தருமபுத்திரர் (மற்றவருடன் சண்டைசெய்ய நாம் -௱௫ பேயர். நமக்குள் சண்டைவந்தால் நாம் ஐந்து அவர் நூறு) என்று சொன்னதைக் கேட்டிருப்பீர்களே? ஆதலால் பெரு விஷயங்களில் நாம் ஒருபொழுதும் நமது பொறுமையைக் காட்டாது ஒன்றுபட்டிருத்தல்வேண்டும். வேதவியாசபகவான் பவிஷ்யத்தில் ([illegible]) என்று கலிதர்மத்திற் கூறியபடி, இக்காலத்தில் ஒற்றுமைக்குறைவு நமக்கு இப்பொழுது இருக்கிறதென்பது சொல்லவும்வேண்டுமோ ([illegible]) என்பதும் நன்கு நாம் அறியக்கூடியதே. சுமார் ௫0- வருஷங்களுக்கு முன் ஒன்றாய் ஒருவருடன் ஒருவர் சம்பந்தித்திருந்த தென்கலை, வடகலை என்னும் இருதிறத்தார் இப்பொழுது இருக்கும் விஷயத்தைப் பார்த்தீர்களா? இவர்கள் ஒருவர்க்கொருவர் சண்டைசெய்து வீணில் நமது தேசப் பணத்தை வாரியிறைத்து, இங்கிலீஷ் தேசத்துக்கு அனுப்பவே வழி தேடுகிறார்களன்றி, வேறுவிதம் செய்யத்துணியார். ஐயா! ஸ்ரீமத் இராமானுஜாசாரியர் சித்தாந்தத்திற் சொல்லிய முத்திவழியாகிய பஞ்சஸமஸ்காரம் என்பது, அ

[illegible]

[illegible]

[௧] [illegible]

[௨] [illegible]

[௩] [illegible]

திவுடன்கூடிய ஜந்துக்களுக்கேயல்லது சுவருக்கும், வீட்டிற்கும், பாத்திரங்களுக்கும் அல்லவே; அவைகள் முக்தியடையுமோ? இங்ஙனமிருக்க ஏன் வீணில்பணத்தைச்செலவிடவேண்டும்? எந்தச்சுவர் எந்தநாமந்தரித்தாலென்ன? இதுவும் நிற்க. நமது தேசத்து சாஸ்திரங்கள் யுக்திக்கு ஒத்ததல்லவென்றும், மற்றவர் சாஸ்திரங்கள் யுக்திக்கு ஒத்தவையென்றும் சிலர் அபிப்பிராயம் இருக்கக்கூடும்; ஆதலால் அவர் சாஸ்திரங்களையும் நமது பூர்வீகர்கள் இயற்றிய சாஸ்திரங்களையும்பற்றிச் சிறிது கூறுவாம். முதலில் அவர் இத்தேசத்துக் குலதனமான ஆத்திகமார்க்கத்தை ஒழிக்கவேண்டி **புத்திதந்திரம்** என்னும் சாஸ்திரத்தை இயற்றினர். அந்நூல் படித்தவர் தனது சரீரத்திலுள்ள ஓர் பாகமே அறியும்தன்மையுள்ளது என்றுபேசி, அதற்கு அநேக காரணங்கள் காட்டி, நம்மவரைப்பகட்டி நாத்திகத்தை நாட்டுகின்றனர். அவர்கள்சொல்லும்வழியை நாம் சிறிதுகாட்டிப் பின்னர் மறுக்கும் வழிகளையும் கூறுவாம்.

அவர் சொல்லும் காரணங்கள்.

௧ - நாம் காணும் சரீரத்தைத்தவிர்த்து வேறாய் ஒரு ஆத்மா இருப்பதாய் ஒப்புக்கொள்வதில் தக்க காரணங்கள் ஒன்றுமில்லை.

௨ - இச்சரீரத்தில் அறியும் தொழில் ஜீவன் என்னும் வஸ்துவுக்குள்ளதல்ல, அது மூளையின்குணமே; ஜீவன் என்பவனொருவன் இருப்பதும்பொய்யே.

௩ - மூளையை அறியுந்தன்மையுள்ளதெனச் சொல்வதே நியாயம்; ஏனெனில் (௧) இச்சரீரத்தில் எங்கும் வியாபித்துநிறைந்திருக்கும் நரம்புகள் ஒன்றுசேர்ந்து முறுக்கி முதுகெலும்புவழி தலையிற்சென்று மூளையைத் தொட்டிருப்பதால், இது சரீரத்தில் நடக்கத்தக்க ஒவ்வொரு விஷயமும் சேரும் ஓரிடமாய்க் காணப்படுகிறது. (௨) ஒவ்வொரு மனிதனும் ஆலோசிக்கும்போது தலைமண்டை ஓட்டுக்குள் ஒருவித அசைவு உண்டாவதுபோல் அனுபவம் உண்டு. (௩) நெடுங்காலம் ஆலோசனை செய்யின் தலையில் வலி உண்டாகின்றது (௪) ஒருசமயம் மூளைகலங்க ஓர் அடி தாக்கினால் ஒன்றும் தோன்றுவதில்லை. (௫) அம்மூளையில் பித்தம் சம்பந்தித்திருந்தால் நமது அறிவுநிலைமை தப்புகின்றது அதாவது பைத்தியம்கொள்கின்றது. (௬) அம்மூளையில் ஒரோர் பாகம் ரோகம் முதலியவற்றால் கரைந்தால் கோபம், காமம், பொறுமை முதலிய சிற்சில குணங்களைக் காணோம், அதுகொண்டும் அதின் தொழிலே முற்றும் புத்தியெனச் சொல்லலாயிற்று. (௭) சரீரத்தில் அடங்கிய ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பிரயோஜனங் கிடைக்க இதற்கு வேறு பிரயோஜனம் அகப்படாததுபற்றி, இது மற்றொரு வஸ்துவின் தொழிலாய்ச் சொல்லக்கூடாத அறிவுக்கிடம் என்பதும் ஒவ்வும். (௮) அறிவென்பது வஸ்துவைக்காட்டும் பிரகாசம் ஆதலாலும், அவ்விடம் தொட்டால் ஒளி கொடுக்கும் தன்மையுள்ள தீப்பாஷாணம்போலொத்ததாதலாலும் முன் சொன்னபடி சொல்லக்கூடும். (௯) நாம் புலன்களைப்பற்றியே வஸ்துக்களை உணர்வதும் உசிதம்; அவைகளில் ஒவ்வொரு நரம்புகெட்டால் ஒவ்வொரு புலன்கள் வழிமாறி அதின்வழி போகும் வஸ்துக்களின் அசைவு குன்றிப்போவதும் வழக்கம். ஆதலின் இக்காரணங்களாற் சரீரத்திலுள்ள பற்பல உறுப்புக்களைப்போல அவற்றுள் ஒன்றான மூளையின் குணமே அறிவாதலால், அம்மூளையினும் வேறாய் ஜீ

வஸ்யாவிஶாரீரஸ்யவர்த்தமாநஸ்ய, ஜ்ஞாநெதவ்யயொ ஜடெநவாரிஶெஷ்யாக ஜ்ஞாநவ்யாவ்யாவாருத்தீயஉதி(௮) ஜ்ஞாநஸ்யவிஜாதீயத்ரவ்யகார்யத்வதயா, தஸ்யவஶெஶஸ்யாஹிவாதகா த்ருஜ்வநஸீயதயாவாஸ்ரீ வாஷாணெதஸ்யாத்வஸ்ய கார்ய:- ஜ்ஞாநதிதிவஸவம்|(௯) வஸதத்வயஜ்யெத- நாடீமெகெணைவஸவவ ஊராஸஷவிஷயகஸம்பந்தொஜ்ஞாநஸ்யெதி- யத:வஸ மெகைகஸ்யாம் நாட்யாம் ஹ்ருதயாம்வஸெகெஸ்ரீயஜந்யம் நாகவஶ்யெஜ்ஞாநம்|

தெதெதெஹெதவஹி:- ஶரீராஜமகதஸ்யகஸ்ய விஶெஷஹாமஸ்யஜ்ஞாநமணாஶ்ரயதயா தெதாவ்யதிரிக்தஸ்யஸ்யவிஜீவஸ்ய நவொஸாவாகஸிய்ய:ஸ்மடாக்ரூஸா காஸ்த்வவஶவஷாகநயதெஶ்யதம்த்ரம், க நஹ்ய்ஸ்யவஶவ்யம், க்ருதவ்யஷிமெ ஹாவரிதம், யக்கிம்விஷெ வஷிவம்தீதிதவவநஶ்ரூஷெயம்- உதெஶ்யதாதி|

ஸஹ்ருதயா:!!

ஸம்தீதெதாவிகெஷாவக-ஒநிவிஜ்ஞாஹணாநி தயா விஸ்தரீவமாவாகந்யாயெந, கத்ரவ்யதஶிகதாநு தீயாநு, காரணவாதாநுயக்திஹிர நஹவெநவநிராகர த்ருஶாஸம்வாஸாகவிரஹிதம்யக்தியக்தம் வஷவ்யதஸ்ய யெ| தத்ரவ்யயொத:|

[௧] ஶரீராதிரிக்தஜீவஸத்வெஹெதவ:- ப்ரவ்ய:- யுக்தி:- ததொநுபவ: தகவொயபந்திவஶாஸ்த்ராணிதத:- யதவஸ்ருஷெஷ்வவதாஶெஷ்ஷ நஶக்யதெ ஜஹயாவயிதாதகநயம்கத்ரகஷ்பாகி|

[௨] தந்தக்ஷமக்திஜாமெநவெகஹ்ரு தொ ய்தெஷ்யவஜ்ஞா நஶக்திவிஷ்ய:தஹிநவிஶெஷ்ஷெவவ்யஜீவ:- தஷெ வவ்யயந்நவிபத்தி|

[௩] ஸகஷ்யக்தாஸவநாட்யஸொவீஹஹதி தெத்ரதிதநெத்ரவ்யதிவாதயிஷ்யாரெணெஹெதவஹி:, தஸ்யநஸ்ஸாநத்வவிஜ்ஞாதத்ரதாஸாம் ஸம்ஹதிராவஶ்யெவதயா- க்ருமொவநாஸ்வஜ:கவாரஉநவஉபஜாநொவிவெஷாவிஶெஷ:, ஸஞ்க்ஷுஸ்யஉநஸ்வம்ஹா ஹித்ரவிஸவவ:. ஶிரொவெதநாநஹவஸ்தநபக்திகொபிஜொயிரொஹதி:யத:!ஸஹஸ்ராரா:- கஸ்தி (நாடீஸமாதாநவ:) வதாஸவ:-ஶிரொவெதநாதககவாயாஸ்த: பஹிரொஶவாணொஉய்யவஸாம் தா:விதவாஹிந்யாயஉந்யா:கஜநிரொய:விதத்ர வஸ்யதா, தநாதெஜாயஉந:கஸ்திதெத:-கசவவ|கெ ஷவிஜய ஹெதாதிஷஶிரொரொமெஷ விரா

வன், மனது இரண்டும் சித்தித்தல் எங்ஙனம் பொருந்தும் என்பதும்தவிர, நமது முன்னோர்கள் தங்கள் தங்கள் புத்திபோனவழி தாறுமாறாய் உடற்கூறுகளைக் கூறியிருப்பது எல்லோரும் அறிந்தவிஷயமே. அக்காலத்தவர் சல்லியதந்திரத்தில் வல்லவரல்லவென்பதுமே.

நண்பர்களே!

இவர்கள் சொல்லும்வழி இன்னும் பலவிருப்பினும், ஒருபானை சோற்றிற்கு ஒருசோறு பதம்பார்ப்பதுபோல் இங்கு எடுத்துக்காட்டிய இவரது துர்வாதங்களை அகற்ற, நமது முன்னோர் கூறிய சாஸ்திரங்களிற் சிலது விரிப்பாம்.

க - முதலில் சரீரத்தைத்தவிர்த்து ஆத்மா(அறிவினிடமாய ஜீவன்) ஒருவன் உண்டென்பது ஒப்புக்கொள்வதற்குக் காரணம் யுக்தி ஒன்றே முதன்மைபெற்றது. பின்பு அனுபவமும் உபபலமாகும். அதையே அநேக சுருதிகளிற் காணலாம். நாம் கண்டுள்ள வஸ்துக்களைக்கொண்டு நிலைநாட்டவேண்டும்; கூடாதுபற்றி வேறுண்டென்று சொல்லத்துணிகிறோம்.

உ - அவர்கள் சொல்லியபடி அறியுந்தன்மை மூளைக்குச் சித்திக்குமாயின் எவ்விதத்திலும் ஜீவன் உள்ளது பொய்யாய் விடும். அதுவே பொருந்தாது.

ங - மூளையினிடம் சரீரத்திலுள்ள நரம்புகளெல்லாம் சேர்ந்து செல்வது வாஸ்தவந்தான் ஆயினும் நாம் பின்னுற்சொல்லப்போகிற சில காரணங்களால் அது மனத்திற்கு ஓர் இடமாதலால், அவ்விடம் நரம்புகள் சேர்வது பயன்படும். அங்ஙனம் தலைமண்டையோட்டினுள் ஆலோசிக்கும்பொழுது உண்டாகும் ஒருவித அசைவின் அனுபவமும், அக்காலத்து அவ்விடம் மனது என்னும் ஓர் நுட்பப்பொருளின் சம்பந்தமெனச் சொல்லவுங்கூடும். தலையில் வலியுண்டாவது இதற்குக் காரணமேயாகாது. எங்ஙனமெனில் மூளையென்பது மண்டையோட்டிற்குள் இருக்கும் ஓர்வகை (நரம்பு மாமிசங்களின் தொகுதி) பொருள். தலைவலி என்பதோ மண்டையோட்டின் வெளியில் மேற்றசைக்கும் அவ்வென்புக்கும் நடுவிற்செல்லும் ஓர் பித்தநீர்க்குழலில் நீர் தடுக்கப்பட்டு, அப்பொழுது அக்குழலில் உண்டாகும் ஓர்வித உணர்வு. ஆதல்கொண்டே சில தலைவலிகளுக்கு வைத்தியர் நெற்றி நெரிக்குநேர் ஓடும் பித்தக்குழலைக் குத்தி நீரெடுப்பது வைத்தியமாகக் கொண்டிருக்கிறார்கள். மூளை கலங்க அடிபடும்பொழுது ஒன்றுந்தோன்றாததும் அதின் தொழிலே புத்தியெனச் சாதிக்கக் காரணமாகாது. அவ்வாறு சரீரத்தில் பற்பல மர்மங்களிருத்தலால் அவ்விடங்களில் ஏதேனும் தாக்கில் அவ்வாறு சம்பவிப்பது அனைவர்க்கும் தெரிந்தவிஷயமே. அவ்வாறு அறிவுகலக்கம் உண்டாவது அவ்விடம் மனதின்ஸ்தானமாகிலும் ஒவ்வும்; அதுகொண்டும் அதின் தொழிலே அறிவு எனத்துணிதல்கூடாது. அம்மூளையிற் சிலபாகம் கெட்டால் கோபம், காமம் முதலிய குணங்கள் மனதிற்குக் குன்றிவருவதும், நரம்புகளிற் சில வெட்டுண்டால் சிலபுலன்களுக்குப் பிரயோஜனம் மாறுவதும், மூளையின்வேறாய் மனதுஎன்பது இருப்பினும் அது ஒவ்வொரு வழியாய்ச் சரீரம் எங்கும் சென்று ஒவ்வொரு சங்கதியையும் அறியுமாதலால் அவ்வழி கெட்டால் அவ்விதம் சம்பவிக்கவும் கூடும். சரீரத்தின் உறுப்புக்களில் இஃது ஒன்றுமாத்திரம் பிரயோஜனமில்லாததுகொண்டு இதற்கு இதுவே பிரயோஜனமென்று சொல்லக்கூடுமோ? ஆனால் பக்குவாசயத்தின் பக்கங்களிற் சுற்றுண்டுகிடக்கும் சில

யேநம்விகித்ஸகாஸந்திஷ்டந்தி। நாடீத்ரயஸம்ஸக்த
ஏதத்விநு நஸ்ஸாரதிகிம்விதி த்ருவியர்த்தம். யத: ஶரீ-
ரேவஹ ஏவ கார்யாணி ப்ராணிவிஶேஷஸ்ய வி
நாடீத்ரயஸஹிதேந கிம்விஸர்வாதீதி ஸர்வஜ்ஞநம்.
கிஞ்ச தத்ர வேத்ஸ்வித்தம் தது நாடீத்ரயஸ்ய ஸ்தாந
ஸ்தாநத்வபிரஜ்ஞேதி நதாவதாபி தஸ்ய பு-
த்திஶக்தித்வஸித்தி:. கிஞ்ச। ஸர்வஸ்யாபி ரக்தஸ்ய
வஸ்து ஶரீரகவியஃ ஏநாடீஶ்ரீராஹ்ருதகாரண
தா. யதாஶரீரகஸ்யா:, நாட்யா:, ஶரீரகவஹி
ஶிஸ்ரயவர்ணாதிகாத்வஸித்தி ஸ்தாநஸ: ஸர்வஸ்யாப்யஸ்ய
வ்ருத்தி ஏதத்விஸம்பந்தம் ஏவ. யத: ஶரீரகே ரக்தயா
ஶரீரகவிஷயக்ருஹணப்ரவணஸ்தாந: கஸ்யம்வித்தநா
ரூநாஶதப்ரயோஜ்யம் நாநாபவதிஜ்ஞாநம். ஸுய
ஶ்ரிநாடீத்ரயஸம்ப்ரயோஜநம் தஸ்யேதி, தஸ்யைவ பு-
த்திஸ்தாநத்வே, பக்ஷாஶயவாஸிஷ்வபி நாம் கேஷாம்
விசித்ராணாம், ம்ருகாணாஞ்சாதஸ்தாத் ஹ்ருதயஸ்யா
வஸ்திதஸ்ய (யக்ருத்) ஸம்ஜ்ஞகஸ்ய மாம்ஸபிண்டஸ்ய
பேஶீநாஞ்ச ப்ரயோஜநாநுபவஸம்பாத: கிமேதத்வி
புத்திஶக்தத்தா? தர்ஹி ஏகத்வித்ரிபுத்தய:
ஸ்யு: ப்ரகாஶஶக்தித்வம் ஜாடராக்நிநாமகஸ்ய பித்தகோஶ
ஸ்யாபி தத்வதீதி; ந தாவதா தவிஷஸித்தி:. ஸந்தி ச
பித்தகோஶஸ்ய புத்திஸ்தாநத்வே காரணாநி யதா தத்வ
த்தே புத்திஸாம்யாத் தத்வைஷம்யே வைஷம்யாத். (பி
த்தாநாமதிகம் ஸ்தாநம்) இதி வ்ருத்தவசநாத் ஸாஹநாத் க
அஹிபேநாதி பித்தவஸ்தூநாம் யோகே புத்தேர்மோஹ
நாத், அதிவிநியோகாயாஸ: பித்தஸ்ய க்ஷோபணா
த்தக்ஷுதுத்பத்திஶ்ச நாஸ. க்ஷுதா தவிஷ்டாயாம் ஶீ
க்ரமேவ நிதாநாதோ ஜநநாத் தஸ்ய புத்திஶக்தித்வம் ச
ஶரீரே துர்லபதயா ஹ்ருதயஸ்ய தர்ஹி தந்திகத
ஶேஷபுத்திஸ்தாநகம். தர்ஹி தஸ்யாபி ஶக்தே: தே
யத: ரக்தஸ்ய விஶோதகம் ஹ்ருதயம் வா கஸ்ய நாஸ்தி வி
ஶேஷத்வம்। தத்ர ஹ்ருதயே ப்ராணஜ ஸம்பந்த ஜநிகார
ணாநி யதா: ஶ்வாஸமார்க்கே ஸஞ்சாரிணோ மலஸம்ப
ந்தே தஸ்மிந் ஹ்ருதயதேஶே நித்ராஜாயதே. நித்ராகா
லே ஊர்த்வநிரோதே ஶ்வாஸோச்ச்வாஸ: க்ரமாத்தேஷா
மேஷாம் நித்ராத்யயே ச பஞ்சேந்த்ரியாணாம் ப்ரவ்ரு
த்தயஸ்ஸந்தி. (ஶோணிதகபப்ரஸாதஜம் ஹ்ருதயம்
விஶேஷேண சேதநாஸ்தாநம் தஸ்மிந் தமோபிபூதே ஸர்வ
ப்ராணிந: ஸ்வபந்தி) இதி. கிஞ்ச ஸர்வோஹ்யயம் ஜந:
ஸ்வஹ்ருத்ப்ரதேஶே நிர்திஶந், க்ருஹீதேந ஹ்ருதயா

குடல்களும், மிருகங்களுக்கும் இருதயத்தின் கீழே கிடக்கும் யகிருத் (யக்ருத்) என்கிற ஒருவகை மாம்சபிண்டமும், மற்றும் சில பேசிகளும் அத்தன்மையைப் பெறவேண்டிவருமல்லவா? அப்பொழுது ஒருபுத்தி, இரண்டுபுத்தி, மூன்றுபுத்தியெனப் பலவிதம் பேசலாகும் என்றறிக. அதற்குப் பிரகாசிக்குந்தன்மையுண்டென்பது சத்தியமாயினும், இவ்வாறு இத்தன்மை [ஜாடராக்நி] என்றுவழங்கும் பித்தகோசத்திலும் உள்ளதாதலாலும், அப்பித்தம் சரியாயிருந்தால் புத்திநிலை சரியாயிருப்பதும் இல்லாவிடில் புத்திமாறுவதும் அனுபவத்திலிருப்பதாலும், [பித்தாநாமதிகம் ஸ்தாநம்] என்று பெரியோர் உரைப்பதாலும், அபின் முதலிய பித்தவஸ்துக்களின் சேர்க்கை புத்தியை மயக்குவதினாலும், அதிகமாய்ப் புத்தியைச் செலவழித்துக் கடுமையான வேலைசெயதால் சீக்கிரத்தில் பித்தக்கொதிப்பென்னும் பசியும், அப்பசிக்கு ஏதேனும் உணவு தராவிடில் வயிற்றுவலி காணுவதாலும் அப்பித்தகோசத்தின் தொழிலே புத்தியெனவும் சொல்லப்பொருந்துமோ? சரீரத்தில் அருமையாதலால் இவர்கள் புத்திஸ்தானமெனக் கூறும் மூளைக்கும் சக்தியை விளக்கும் இரத்தத்தைச் சுத்திசெய்யும் இருதயஸ்தானத்தைப்பார்க்கிலும் இது என்னசிறப்புடைத்து. இருதயம் புத்திஸ்தானமென்பதற்குக் காரணம் அந்த இருதயத்தில் நமது சுவாசமார்க்கமாய்ச் செல்லும் மலங்கள் சில சேர்ந்தால் அப்பொழுது நித்திரை [ஐம்புலன்களின் ஒய்வு] உண்டாவது. அந்நித்திரைசெய்யுங்காற் கிளம்பும் மிதமிஞ்சிய மூச்சுக்களினால் மலங்கள் வெளிப்போனால் பின்பு மயங்கியபுலன்கள் வேலைசெய்வது நம்மவர் அறிந்ததே. இங்ஙனம் தன்வந்தரிபகவானியற்றிய சுச்சுருதநூலிற் [ஶோணிதகபப்ரஸாதஜம் ஹ்ருதயம் விஶேஷேண சேதநாஸ்தாநம் தஸ்மிந் தமோபிபூதே ஸர்வப்ராணிந: ஸ்வபந்தி] என்று இருதயம் புத்திஸ்தானமென்றும், அதில் மலங்கொண்டால் நித்திரை வருமெனவும் கூறியதைக் காணலாம். மற்றும் உலகெங்கும் ஒவ்வொரு மனிதனும் தன்னைக்குறிக்கும்பொழுதெல்லாம் நான் என்று கையால் மார்பைத் தட்டிக்காட்டுவது வழக்கமாயிருக்கிறது இது சிறுவர்முதற் கிழவர் வரையிலும் உள்ளது. இக்காலத்திற் புத்திதந்திரம் படித்தவரும் அவ்வாறே செய்கின்றனரன்றி, இக்காலத்து சாஸ்திரங்களைப் படித்தும் பலஜனங்களாய் ஒருங்குசேர்ந்து ஏன் இனியாவது தலையில் அடித்துக் கொள்ளக்கூடாது. இவரது சாஸ்திரம் இவர்களுக்கே அனுபவத்திற்கு வரவில்லையே! மற்றெவருக்குவரும் இந்நூலும் நூலோ? கனவான்களே! கொஞ்சம் கவனியுங்கள். இவர்கள் நமது முன்னோரெழுதியநூற்களிற் சரீரதத்துவங்கள் நன்கில்லையெனச்சொல்லிக் களிக்கின்றனர் அதுவிஷயம் பின்பு சொல்லப்படும். இப்பொழுது இவர்கள் சொன்னபடி இம்மூளையின்குணமே புத்தியாயின் இம்மூளையென்பது ஒருபெரிய அளவினையுடையதாதலாலும், இதற்கு நாலாபக்கங்களிலும் நரம்புகள் சம்பந்தித்திருப்பதாலும், ஒருவேளையாவது நான்கு, அல்லது ஐந்து அறிவுகள் உண்டாகக்கூடும் அவ்வாறு எவ்விடத்திலும் காணோம் எவரும் அனுபவிப்பதில்லை. ஒவ்வொருவரும் தாம் ஒருவேலையைக்கவனிக்க மற்றொருவேலை அதே காலத்தில் வந்தாலும் அவ்விஷயத்தில் வேறுவிஷயம் மனம் சென்றதுபற்

[illegible]

றி அதைக்கேட்டேனில்லையென்று சொல்லுகின்றனரேயொழிய வேறில்லை. அப்படிக்கில்லாது இவ்வைம்புலன்களின் நரம்புகளும் ஒரேயிடம் சேருமாயின் அவ்விடத்தில் எல்லாவிஷயமும் சேர்ந்து ஒன்றுடன் ஒன்று தாக்கி ஒருவிதமும் இல்லாமற்போவதுடன், முற்கூறியபடி ஓரிடம்கெட்டால் காமம், ஓரிடம்கெட்டால் கோபம் முதலியன ஒழியுமென்பதும் ஒவ்வாது. இதுநிற்க. எல்லோருக்கும் அனுபவத்தில் காலில்வலி கையில்வலியென்று தனித்து ஒவ்வொரு உறுப்புக்களிலும் வெவ்வேறாய் நாம் சுகதுக்கங்களைக் கண்டிருக்க, இவர்கள் சொல்லியபடி அசைவற்று ஓர் மூலையிற்கிடக்கும் மூளையிற்றானே அறிவென்னும்திரிபு உண்டாகுமாயின், இவ்வனுபவம் எங்ஙனமொவ்வும். நேசர்களே! நாம் ஒருவீட்டிற்புகுந்து பலவிடத்திலிருந்துவரும் தந்திக்கம்பிகளைத் தொட்டறியும் சங்கதி இது இன்னவிடத்திலுண்டாகுமென்பதும் எவரேனும் அறிவாரோ? அக்கம்பியின்வழி இடத்தைக்குறிக்கும் ஓர் அசைவுண்டானால்மாத்திரம் கூடும் அது இவ்விடத்துப் பொருந்தாது. பின்னும் முதலில்நாம் ஒரு வஸ்துவைப்பார்த்தாலும், அல்லது கேட்டாலும், உடனே அவ்விடம் உள்ள நாடிகளிற் சிலவித அசைவு உண்டாகி, (அதுவே அறிவு) பிறகு திரும்பிவரும் அசைவு ஒவ்வொரு இடங்களிலும்வந்து முற்றுப்பெறுமாதலால் அவ்வவ்விடத்துச் சுகதுக்கம் தோன்றுகின்றதெனவும் கூடாது. எவ்விதம் சொல்லினும் அந்தந்த நரம்புகளிலுண்டாகும் அசைவு மூளையில் தாக்கின் அறிவு என்னும் திரிபு அங்கு தோன்றுமேயன்றி வேறெங்குமில்லையாதலால், நரம்பின் முதல் அசைவுக்குப் பின்னசைவு தம்பியேயாகும். இக்காரணங்களால் மனது மூளையிலும் வேறு என்று நன்கு துணியப்பட்டது. அம்மனதுஅணுவானது கொண்டு எந்தக்காலத்தில் எந்தநரம்புடன் கூடுமோ அந்தக்காலத்தில் அதுவழிசென்று அதில் அடையக்கூடிய பொருளுணர்ச்சியையும் பெறும். ஒருபொழுதும் அணுவுக்கு அநேக நரம்புகளின் சம்பந்தம் கூடாதுபற்றி, ஒருக்காலும் பல அறிவுகள் உண்டாவதற்கிடமில்லை. மேலும் அது வேகமுள்ள வஸ்துவாதலால் சரீரம் எங்கும் நரம்புகளின்வழியும் இரத்தக்குழலின்வழியும் சென்று, ஆங்காங்கு சரீரத்திற் சுகதுக்கங்களைக்கவரும். மேலும் ஒரு சமயம் சரீரத்திற் சஞ்சரிக்கும் இம்மனது பித்தத்தில் மூழ்கினால் அதுவே அறிவு வேறுபாட்டுக்குக் காரணமாம். ஓர் நரம்பு அல்லது மூளையின் ஓர் பாகம் கரைந்தால் அதுவழி சென்றறியவேண்டிய சங்கதிகள் ஒழிவதும் கூடும். அம்மனத்திற்கும், அதை நடத்தும் ஜீவனுக்கும் இருப்பிடம் நான்கு என்று, பிரமோபநிடதம் என்கிற உபநிடதம் கூறுகின்றது. [illegible] இப்புருஷன் நான்கிடங்களிற் குடிகொள்வான் அவை நாபி, இருதயம், கண்டம், சிரம் என்பன. இவற்றுள் மூன்றுக்கு முன்னமே காரணஞ்சொன்னோம். கண்டஸ்தானத்தில் புத்திசம்பந்தம் [illegible] என்கிற யோகத்தில் வெளியாகும். இது கொண்டே நமது முன்னோர்கள் [illegible] [illegible] என்று எடுத்துரைத்தனர். இவ்வித

[illegible]

𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃

“𑌕𑌿𑌂 𑌜𑌗𑌤𑍍 𑌸𑌤𑍍? 𑌉𑌤𑌾𑌸𑌤𑍍? 𑌇𑌤𑌿„

𑌸𑌦𑌿𑌤𑌿। 𑌸𑌤𑌃 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂; 𑌕𑌾𑌲𑌤𑍍𑌰𑌯𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌕𑌂; 𑌸𑌦𑌿𑌤𑌿 𑌸𑌤𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚 𑌸𑌮𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌂।

𑌅𑌸𑌦𑌿𑌤𑌿। 𑌅𑌸𑌤𑍋 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂; 𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌲𑌾𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌕𑌂; 𑌅𑌸𑌦𑌿𑌤𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑍇𑌤𑌿 𑌚 𑌸𑌮𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌕𑌂

𑌸𑌤𑍋 𑌯𑌥𑌾 𑌪𑌟𑌃 𑌅𑌤𑍍𑌰 𑌶𑌬𑍍𑌦𑌃; 𑌅𑌰𑍍𑌥𑌃 𑌤𑌯𑍋𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇।

𑌅𑌸𑌤𑌃 𑌶𑌬𑍍𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑌾𑌰𑌂, 𑌯𑌥𑌾 𑌵𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌸𑍁𑌤𑌃।

𑌅𑌸𑌤𑌃 𑌶𑌬𑍍𑌦𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑌾𑌰𑌂, 𑌯𑌥𑌾 𑌰𑌜𑍍𑌜𑍁𑌸𑌰𑍍𑌪𑌃, 𑌮𑍃𑌗𑌤𑍃𑌷𑍍𑌣𑌿𑌕𑌾𑌸𑌲𑌿𑌲𑌂 𑌚 𑌇𑌤𑌿।

[illegible]

ம் புத்தி தந்திரத்தில் உள்ள சில குறைகளைக்காட்டி இம்மட்டில் விட்டோம்; இனிச்சொல்லிற்பெருகும்.

இன்னும் வரும்.

கடிதங்கள்.

உலகம் சத்தா? அசத்தா? என்பது.

சத்து என்பது சத்தினிலக்கணம் கூறுகின்றது; சத்து யாண்டு முள்ளது; சத்தெனினும் உள்ளதெனினுமொக்கும்.

அசத்து என்பது அசத்தினிலக்கணம் கூறுகின்றது; அசத்து யாண்டுமில்லது; அசத்தெனினும் இல்லதெனினுமொக்கும்.

சத்துக்கு உதாரணங் கூறுகின்றது; படம். அது படமென்னும் சொல்லும் அதன்றோற்றமும் பொருளு முடனிகழ்வது. படமெனினும் ஆடையெனினு மமையும்.

அசத்துச் சொல்மாத்திர மாதற்கு உதாரணங் கூறுகின்றது; மலடி மைந்தன்.

அசத்துச் சொல்மாத்திரமுந் தோற்றல்மாத்திரமுமாதற்குதாரணங்கூறுகின்றது; கயிற்றரவு கானனீரென இவை.

அசத்தின் இரண்டுவகை உதாரணம் விளக்கவுரைக்கின்றது:—மலடிமைந்தன் தோற்றல்மாத்திரமென்பது எனைத் துணையுமின்றிச் சொல்மாத்திரமாகவே நிகழ்வது.

கயிற்றரவு சொன்மாத்திரமுந் தோற்றல்மாத்திரமுமாய் நிகழ்வது. இது முன்னர் மயக்கத்தான் அரவெனத் தோற்றித் தெளிந்தவழிக் கயிறாகவே நிகழ்வது. அது காரணமான கயிற்றைக்கண்டபின்னர்க் காரியமான அரவு தோன்றாது கயிறென்றே காணப்படுவதென்பது கருத்து.

கானனீர் சொல்மாத்திரமுந் தோற்றல்மாத்திரமுமாய் நிகழினும் கயிற்றரவுபோல் காரணங்கண்டவழிக் காரியந் தோற்றாதிருப்பதன்று; நீர் தோற்றிக்கொண்டேயிருப்பது போல்வது; அங்ஙனம் தோற்றியஞான்று நீரென்பதெத் துணையுமின்றே.

மலடிமைந்தன்போன்று தோற்றமென்பதின்றிச் சொல்மாத்திரமாயிருப்பதூஉம், கயிற்றரவும் கானனீரும்போன்று சொல்மாத்திரமும் தோற்றல்மாத்திரமு மாயிருப்பதூஉம், கயிற்றரவு கயிற்றைக்கண்டவழி யரவுதோன்றாதிருப்பதூஉம், கானனீர் கானலையுணர்ந்தவழியுநீர்தோற்றிக் கொண்டிருப்பதூஉமாம் மூவகையும் அசத்தின்பாற்படுமென்க.

படமென்பதற்குச் சொல்லும் தோற்றமும் பொருளுமென்னு மிம்மூன்றும் உண்மையின் சத்தெனப்படும். இதுநிற்க:

இனி உலகம் சத்தா? அசத்தா? [illegible] மேற்கூறிப்போந்த நியாய வாயிலாகக் காரிய காரணவாத வேதுவின் கடத்தைக் கொண்டு விவகரிப்பாம்.

காரியமென்பது: காரிய[illegible]னிலக்கணங் கூறுகி காரிய முன்னின்மைக்கு எதிர்மறை.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

காரணமென்பது: காரணத்தி னிலக்கணங் கூறுகின்றது காரணம் காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது. நியதமின்றி யமையாமை. காரணமெனினுங் கருவியெனினுமொக்கும்.

காரியத்திற்குப் பேதகாரண மிரண்டும் அபேதகாரணமொன்று முண்டெனத் துணியப்படும். கடமாகிய காரியத்திற்குத் தண்டு சக்கரந் துணைக்காரணமுங் குலால நிமித்த காரணமுமாகிப் பேதமு மண்முதற் காரணமுமாகி அபேதமுமாகின்றன.

காரியம் வனைவதற்கு முன்னும் அழிவுபாட்டிற்குப்பின்னு மின்றெனபது துணிவேனும், வனையப்பட்டபின்னும் அழிவுபாட்டிற்குமுன்னுமுளதாதலா னிடைநின்றகாலத்தே காரியமானகடஞ் சத்தாமெனின் யாது சத்தோ வஃது முன்னும் பின்னு நிகழ்வுமென்னு முக்காலத்து நிகழவேண்டும்; முன்னும் பினனு மில்லாதது "இல்லது வாராது உள்ளது போகாது" என்னு நியாயத்தா னிடைநினற காலத்து யாங்ஙனநிகழும்? இடைநின்றகாலத்து உளதேன் மண்ணாய்நிகழுங்கால் கடமின்று; மண்ணினகண் வளைவு குவிவு முதலாய குணங்களெய்தியவழிக் கடமெனனும் பெயரெய்தும். வளைவு குவிவுமுதலியன குணங்களேயன்றிக் குணியன்றாம். அக்குணங்களும் குணியான மண்ணின்கட்டோன்றி யதன்கண்ணே நிகழும்.

குணியெஞ்ஞான்றுளதோ வஞ்ஞான்றே அதற்குக் குணமுமுண்டென்ப தன்றே; வளைவு குவிவு முதலாய குணங்க ணிகழ்வதற்கு முன்னரு முருட்சி யல்லது வேறு குண நிகழ்ந்தன. மண்ணென்னுங்குணி தன் குணத்தொடுங் கூடிய வழியானே யம்மண்ணுக்குக் கடமென்னும் பொருட்பெயரெங்ஙனம் பொருந்தும்? மண்ணென்னுங்குணியு மதன்கணுளதாய வளைவு குவிவு முதலாய குணங்களுமே யல்லது கடமென்னுஞ்சொற்குப்பொருள் வேறின்மையான் இடைநின்றகாலத்துங்கடமின்றென்பதுவே திண்ணம். இதனானே எஞ்ஞான்றுங்கடமென்றொருபொருளின்றென்றே பசுமரத்தாணிபோ னாட்டப்பட்டதென்க.

அற்றேல், கடமென்னுந்தோற்றமும் அபாவமாகவேண்டுமன்றே. கடத்தோற்றங் காணப்படுவதனாற் கடமின்றென்றெவ்வாறு கருதப்படுவதெனின் தோற்றம்பொருளாகுங்கால் கயிற்றினிகழு மரவுமுளதாகல்வேண்டும். அரவு பொய்மையாகத்தோற்றினுங் கயிறென்றுணர்ந்தவழி யரவென்பது தோற்றங்கண்டாமில்லை; கடமங்ஙனமன்று. மண்ணல்லது எஞ்ஞான்றுங் கடமின்றென்றுணர்ந்தவழியும் பெயர்த்துந் தோற்றுகின்றதென்னையெனின், நன்றுவினாவினாய்; கூறுதும்:— தோற்றமென்பதிருதிறத்த; அவை காரணத்தைக்கண்டவழிக் காரியந்தோற்றாதிருப்பதொன்று, அது கயிற்றரவுமுதலியன வென்க. காரணத்தைக்கண்டவழிக் காரியந்தோற்றுவதொன்று, அது கானனீர்முதலியனவென்க. கடத்தோற்றங் கானனீர் முதலினபோல்வதொன்றாகலின் காரணமான மண்ணே யாண்டுமுளதெனவுங் காரியமான கடமில்லதெனவு மாய்ந்துணரினுங் கடத்தோற்றமிலதாகாமற் போந்திலது; அற்றாகலினன்றே இத்துணையுந் தோற்றம் பொருளன்றெனக் கூறவந்தாமன்றித் தோற்றமுமின்றெனக் கூறினுமில்லை

[illegible]

"இல்லது வாராது உள்ளது போகாது" என்னு நியாயத்தாற் காரியமின்றெனினுங் காரிய நிகழாக்காலில்லையேயல்லது நிகழ்ந்தாலுளதாகாதோ வெனின், செய்பவன் காரணத்தைக் குணவேற்றுமை செய்வதன்றி யிலதாயபொருளையாக்கற்கிடனின்றெனக.

மண்ணுன்வனைந்தகடம் பெயர்த்துமண்ணுயவழி "உள்ளது போகாது,, என்னு நியாயத்தாற் கடமிலதாகாமற் போதலமையாது. கடம்போலுந் தோற்றினதோற்றமிலதாய்ப்போயதன்றிக் கடமான பொருளிருந்தில்லாமற்போயதன்று; அற்றாகவின், 'இல்லதில்லதே,' 'உள்ளதுள்ளதே,' இலதையுளதாக்கவும், உள்ளதை இலதாக்கவும்யாவரானு மாகலரிதெனக.

இனி "இல்லதுவாராது" என்பதுண்மையேனும் இல்லாத கடம் உள்தாதலில்லை. காரியமான கடம் வனைவதற்கு முன்னர் காரண வடிவாக நின்று காரியப்படுங்கால் வெளிப்பட்டதெனின் காரியப்படுஞான்றும் மண்ணன்றிக் கடமென்னுஞ்சொற்கும் பொருளின்மையானுங் காரணமான மண்ணினுங் கடமின்மையானுங் கடமென்பதின்றேயென்றையமின்றிக்கூறத்தகுமன்றே. கடமுளதாயவழியன்று காரணத்தினிகழ்வதென்றுவது கூறத்தகும். ஒருவர் மற்றொருவர்பாற் பேசாநின்று சிறிது ஞான்று வேறுகாரியத்திலிருந்து பின்னரவரைக் கண்டவழிக்காணுமை நிகழின் அவரில்லின்கணல்லது வேறிடத்திலிருப்பரென் றனுமானிக்க விடமுளதன்றே. அவரைப்பேசியிராவழி யவர் மேலையிடங்களி லிருப்பரென்றெங்ஙனமனுமானிக்கற்பாலது? அதுபோற் கடமுளதாகக் கண்டிருப்பேமெனின் கடமில்லாதவழிக்காரணமான மண்ணின்கணடங்கியிருக்கலாமென் றனுமானிக்கத்தகும். அங்ஙனம் எத்துணையு மின்மையான கடமின்றென்றேகூறத்தகும். இதனுனே கட மண்ணின்கணிருக்கவுமின்றென்றும் வெளிப்படவுமின்றென்றுங் கருதப்பட்டதெனக.

பொருள்களிரண்டு மோரிடத்தின்க ணிருப்பதாகாது. ஒன்று வேறொன்றினுக்கு மேலாகவேனுங் கீழாகவேனும் பக்கமாகவேனு மிருக்கவேண்டும். மண்ணுங்கடமு முளவாயின் மண்ணினுக்குக் கடம் யாண்டையுள்ளது? யாண்டேனுமுளதாயின் மண்ணினுக்கு வேறாகவேயிருக்கவேண்டும்; அங்ஙனமின்றும். ஒன்றில் வேறொன்று நிகழ்வது ஒன்றுண்மையுமொன்று தோற்றல்மாத்திரமுமாயி னமையும். பழுதையின்கண் பாம்பும், கானலின்கணீரும்போல். அற்றேல் அற்றாகஇங்ஙனமே மண்ணின்கண் கடம் தோற்றமேயன்றிப் பொருளின்றென்றுணர்க.

மண்ணின்கண் வளைவு குவிவு முதலிய குணங்களுளவேயெனின் அன்னவையுந் தோற்றமேயாம். அற்றன்றி ஒரு மண்ணேனும் வளையவுங் குவியவும் காணப்பட்டதேயன்று. மண்ணனைத்து மொருங்குசேர்ந்து வளைதல் குவிதன் முதலிய தருமங்களை யெய்தியவெனின், எல்லாமொருங்கு சேர்ந்துண்டாய தரும மொரோவொன்றினுக்குஞ் சிறிது சிறிதாக வேனுங் காணப்பட வேண்டுமன்றே! அவ்வாறின்மையான் மேற்கூறிய தருமங்களையும் பெற்றதேயின்றென்பது துணியப்படுமெனக.

[illegible]

[illegible] 𑌨𑌾𑌸𑌤𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌭𑌾𑌵𑌃 𑌨𑌾𑌭𑌾𑌵𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌸𑌤𑌃 [illegible]।

[illegible]

[illegible]

[illegible]

இதுகாறும் கூறிப்போந்த நியாயங்களான் காரணமொன்றே முக்காலத்தினு முளதென்பதூஉங், காரியமங்ஙனமில்லதென்பதூஉம், அஃதுஞ் சொன்மாத்திரமுந் தோற்றன்மாத்திரமுமாமென்பதூஉங் கூறினும். இதனானே மண் யாண்டு முளதென்றுங் கடம் யாண்டுமிலதென்றுந் துணியப்பட்டதென்க.

ஒரு பொருளுளதாகவேண்டின் முன்னரில்லாதிருந்தே நிகழவேண்டும். இல்லாதிருந்தது இறந்தகாலத்ததாம்; உளதாவது நிகழ்காலத்ததாம். இறப்பு நிகழ்வு மொன்றெனப்படா. அங்ஙனமாகாதவழி இன்மையாயகாலமும் உண்மையாயகாலமும் வேறுமன்றே; ஒரேஞான்றின்மையு முண்மையுமாதலியையா. கடத்தோற்ற முளதாமிடத்துக் கடமிருந்து தோன்றிற்றா? இல்லாது நிகழ்ந்ததா? என்றுசங்கை நிகழும். ஆண்டை நிகழ்ந்தவழி யிருந்தே நிகழ்ந்ததெனின் இருந்தது தோன்றுவதற்கிடனின்றே; இல்லாததே தோன்றிற்றெனின் இன்மையு முண்மையுங் காலவேறுபாடெய்தலின் நிகழ்வின்கணின்மையு முண்மையுங் கூடா. இப்பெற்றியாற் பொருடோன்றற்கிடனின்று. ஒருபொருளழிவுபாடெய்த வேண்டின் உள்ளதொருபோது மழிவுபாடொருபோது மாதலியையும். அழியுஞான்று இருந்தழிந்ததா? இல்லாதழிந்ததா? என்ற இக்கடாவினுக் கிருந்தழிந்ததென்றே விடை கூறவேண்டும். இருப்பதாய வுண்மையும் அழிவதாய வின்மையும் ஒரேஞான்றியையா. இதனானே உள்பொருளழிதற்கிடனின்று. "இல்லது வாராது உள்ளதுபோகாது" என்னு நியாயமே ஈண்டைச்சாலும்.

காரியமான கடம் அசத்தேனுங் காரணமாய மண்ணேனுஞ் சத்தென்பாமேயெனின் கூறுதும்:—எது காரணமெனப்படுமோ அது காரியப்படவே வேண்டும். ஆடைக்கு நூல் காரணமேனும் பஞ்சினுக்கந்நூல் காரியமாகும். அங்ஙனமே கடத்துக்கு மண் காரணமேனும் அம்மண்ணும் தன் காரணமாய வணுக்களுக்குக் காரியமாம். காரியமென்பதனைத்து மெக்காலத்து மின்றென்றிதுகாறுங் கூறிப்போந்தாமாகலின் அம்மண்ணும் அசத்தெனப்படுமென்க.

காரிடமாகவேனுங்காரணமாகவேனுமுள்ளதியாதோ அஃதே யுண்மையாயுள்ளது; அஃதே சத்தெனின் காரியமாகவேனுங் காரணமாகவேனு மிருந்ததியாதோ அஃது காரியமாகவேனுங் காரணமாகவேனு மிருக்கவேண்டும். காரியமெனின் முக்காலத்து மின்றென்று துணியப்பட்டதென்க. யாதுகாரணமெனப்படுமோ வஃது காரணமாகவே யிராது வேறொன்றனுக்குக் காரியப்பட்டு அசத்தென்னும் பெயரெய்துகின்றது. காரியகாரணஞ் சங்கிலித்தொடர்பேபோன்று முடிவின்றி நிற்குமெனின் அஃதுங் காரிய காரணத்தினடங்கி அசத்தெனப்படுமென்க.

பரமாணு அழிவின்றி யெஞ்ஞான்று நின்று காரியப்பட்டு மீண்டு மழிந்து காரணமாகவே யிருக்கும் அஃது காரியப்படுவதின்று; எஞ்ஞான்றுங் காரணமாகவே யிருப்பதொன்றுமாகலின் அனைத்துங்காரியப்பட்டு; அஃதொன்றுங் காரியப்படாதெனக் கோடற்கெனைத்துமேனியாயப் புலப்படுவதன்று. அஃதே காரணமாமெனின ஓர் பரமாணுவினோடு வேறோர் பரமா

[illegible]

[illegible]

[illegible]

ணு விரவி அஃது வேறோர் பரமாணுவினோடு விரவியிங்ஙனமே காரியப்பட்டு மகத்தாகவேண்டும். முன்னர் ஓரணுவினோடு வேறோரணுவிரவுமாயின ஓர்பால்விரவி யேனையமூன்றுபாலும் விரவாதிருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக ஒரெலுமிச்சங்கனியோடு வேறோர்கனி விரவுமாயின் ஓர்பால் விரவி யேனையவிரவாதிருக்கக்கண்கூடாகக்கண்டாமன்றே. இவ்வாறே யோர்பொருளோடு வேறொன்று விரவுங்கால் ஓர்பால்விரவி யேனையபால்விரவா. விரவியவழி விரவாதனவு நிகழ்தலின் முன் பின் நடு முதலியன நிகழ்வது ஒருதலையாமெனக. எது உறுப்பினிகழ்வதோ அஃது காரணமாகாமே காரியமேயாம். காரணமாக நிகழ்ந்தன வெனைத்துங் காரியமாக இஃதொன்றுங் காரியப்படாதெனபது உத்திக் கொத்ததன்று. யாது எவ்வாறு நிகழினுங் காரணமொன்றுளதாக வேண்டுமெனின் அஃதேன் காரியப்படாது? உலகத்தோற்றரவுக்குக் காரணம் வேண்டற்பாற்றெனின், ஆண்டைக்காரணமாயவணு நிலைபேறுடைத்தாயினன்று ஈண்டையுலகமென்பதுசத்தாம். காரியகாரண முடிவின்றிச் சேறலின் அனவத்தாதோடமெய்தும்; ஆகலின் முடிவின்கண் எத்துணையணுவு மிருப்பதாகக் கூறலெவ்வாற்றானு மியையாதென்க.

கண்ணுக்கும் மனதுக்கும் விடயமானவணு அசத்தாய்க் கழியினுங் கண்ணுக்கும் மனதுக்கு மெட்டாவதி நுட்பவணு உண்மையாயுளதே லஃது கண்கூடாமா? அனுமானவளவையானறிதற்பாற்று? காண்டலளவையானறிவதன்று, அனுமானவளவையானறிதற்பாற்றெனின், கண்கூடான சத்தைக் கொண்டு கண்கூடன்மையான சத்தையறிவது அனுமானத்துக் கிலக்கணமாகலின், இவ்விலக்கணத்தான் புகை சத்து, நெருப்புசத்து. புகை கண்கூடு, நெருப்பு அங்ஙனமல்லாதது. கண் கூடானபுகையானங்ஙனமல்லாத நெருப்பையுணர்வது தக்க திருட்டாந்தமாம். இதுபோன்று தாட்டாந்தத்துக் கொவ்வாது. கண்ணுக்கும் மனத்துக்கும் விடயமானவணு அசத்தெனத் துணியப்பட்டது. கண்ணுக்கும் மனத்துக்கு மெட்டாத அணு சத்தெனச் சொல்லப்படுகின்றது. கண்கூடாம்புகை சத்தாயிருப்பது போன்று தாட்டாந்தத்தும் கண்ணுக்கும் மனத்துக்கும் விடயமான அணு சத்தாகவேயிருக்கவேண்டும். அங்ஙனமன்றி அசத்தாகப் போந்தமையின் திருட்டாந்தாபாசமாகின்றது. கண்ணுக்கும் மனத்துக்கும் விடயமான அணு சத்தாயிருப்பதாயின் கண்கூடான விச் சத்தைக்கொண்டு அங்ஙனமன்மையான கண்ணுக்கும் மனத்துக்கு மெட்டாதவணுச் சத்தாயிருப்பதென் றனுமானிக்கலாம். புகையானது ஆராய்ந்துழிப் பனியாய்ப்போந்த விடத்துப்புகை அசத்தாய்ப் போமன்று? அற்றேல், நெருப்பு எங்ஙனஞ் சத்தாம்? அனுமானம் தோற்றம் எதார்த்தமென்றிருதிறத்து. இவற்றுள் தோற்றவனுமானத்தால் பொருள் சித்தித்திலது. எதார்த்த அனுமானத்தால் பொருள் சித்திக்கும். புகை எதார்த்த அனுமானம். புகையைப்போல் தோற்றி ஆராய்ச்சியின்கண் அஃதின்றி நின்ற பனி தோற்றவனுமானமாம். எதார்த்தவனுமானப்புகையான் நெருப்புச் சித்திக்குமன்றித் தோற்றவனுமானப் பனியாற் சித்தித்தற்பாலதா? அங்ஙனமே கண்ணுக்கும் மனத்துக்கும் விடயப்படும் அசத்தான தோற்றவனுமானத்தான் கண்ணுக்கும் மனத்துக்கு மெட்டாதவணு சித்தித்தற்பாலதன்று.

[illegible]

உலகினின்றும் பற்பலபொருள்கள் காரியப்பட்டுப் பின்னைக் காரணமாவதைக் கண்டிருக்கின்றாமன்றி யுலகங் காரியப்படுவதை நாமேனும் நம்முன்னோரேனுங் கண்டதுமின்று; கேட்டதுமின்று. காண்டலுடலானன்றியாகாது; கேட்டது ஏனையோர் கூறக் கேட்கவேண்டுவது; கூறல் காண்டலின்றி யெங்ஙனமியையும்; காண்டல் உடலினோடுங்கூடியே நிகழற்பாலதாம். உடலுலகன்றியின்றாம். உலகத்தினின்மை யுடலன்றிப் பிறிதொன்றிருந்து கண்டாரைக் காண்கின்றிலேம். அற்றாகலின் உலகமெஞ்ஞான்றுமுள்ளது; காரியமன்று காரணமேயெனின் கூறுதும்:—

எவ்வப்பொருளினையுமாரயின் ஒன்றன்கூட்டம், பலவினீட்டமென்றிருதிறத்த. ஒன்றன்கூட்டம் பலவினீட்டமென்பவற்றின்பாற்படுவனவன்றி யெப்பொருளு மியாண்டுமுளவாகா. திருட்டாந்தமாகக் கடமொன்றன் கூட்டமா? பலவினீட்டமா? எனின் ஒன்றன்கூட்டமேயாம். ஒன்றன் கூட்டமாய மண்ணினையன்றி முக்காலத்தினுங் கடமென்பதொன்றின்றாம். அம்மண்ணு மொன்றன் கூட்டமான வணுவினையன்றியாகா. பலவினீட்டமு மிவ்வாறே காண்க. இங்ஙனமே ஒவ்வொரு பொருளினையு மாராயுங்கால் இன்றாகவே முடியும். உலகமிங்ஙனமாய வாராய்ச்சியா னின்றெனப்படும். ஒன்றன்கூட்டம், பலவினீட்டமென்பன காரணமாகக் கூடிநின்று வேறாகத்தோற்று மவசரத்தினைக் காரியமெனப்படும். முன்னரே யணுவினைப் பூருவபக்கப்படுத்தினும் ஆண்டையுணர்க.

உலகங் காரியப்படுவதைக் கண்டாருங் கேட்டாருமின்றாகலின், எஞ்ஞான்றும் நித்தியமேல் உலகஞ் சத்தாயெஞ்ஞான்று நித்தியமா? அசத்தாயெஞ்ஞான்றும் நித்தியமா? சத்தாயெஞ்ஞான்று நித்தியமேல் சத்தென்றுரைப்பதெவ்வாற்றானு மியைந்திலது. அசத்தாய்நின்று நித்தியமேல் இல்லாதது நித்தியமென்றுரைத்தலானென்பயன்? இல்லாத முயற்கொம்பினையு நித்தியமென்றுரைப்பதற் கொக்குமன்றா? உலகமெக்காலத்து மின்றாகலின் உலகத்தினைக் காரியமென்றேனுங் காரணமென்றேனுங் கூறுதலெத்துணையுமியையாதென்க.

இதுகாறுங் கூறிப்போந்ததனான் உலகம் அசத்தாய்க்கழியினுங் கண்கூடாகவின்பத்துன்பங்களைத் துய்க்கின்றாமே, யாங்ஙனமுலகை யசத்தென்றுரைப்பதெனிற் கூறுதும்:—இன்பதுன்பங்களைத் துய்ப்பார் யார்? நாமே. நாம் யார்? மானிடர். மானிடர் காரியமா? காரணமா? காரியம். காரியம் பொய்யென்பதனை முன்னரே விளக்கினாம்: காரணமான உறுப்போ, அவை தாந் தமதுகாரணமாய ஊன், குருதி, என்பு முதலியவற்றைநோக்கக் காரியப்பட்டுப் பொய்யேயாம். இவ்வாறே ஒரோவொன்றும் பொய்யாமிடத்து இன்பதுன்பங்களும் அவற்றினைத் துய்க்குமனுபவங்களும் பொய்யாகப் போதலாகும். இஃதென்னை? வாயடிகையடியாயிருக்கின்றதன்றி ஐயநிகழ்ச்சியொழிந்ததன்றெனின், சொப்பனமுழுவதூஉம் பொய்யாமன்றே? சொப்பனத்திற் கண்கூடாகக் கண்டிருக்கு மின்பதுன்பங்களு மவற்றினுக்கு முதலாயுள்ள சொப்பனவுலகமும் பொய்யென்பதனைத் துணிந்ததின்றா? அவ்வாறே யிவ்வுலகினையு மின்பதுன்பங்களையு மேன் பொய்யென் றியம்பற்பாற்றன்று.

ஒருபொருளினை யறியவேண்டுவோன் அப்பொருட்கு வேறாய்

𑌅𑌯𑌂 𑌘𑌟𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌕𑍇𑌵𑌲𑌨𑌿𑌦𑍍𑌰𑌿𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌃, 𑌅𑌯𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑌰𑌿𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌦𑍇𑌹𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑍃𑌤𑌿𑌕𑍃𑌤𑌾𑌦𑌿𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑌾𑌂। 𑌭𑌾𑌨𑍁𑌕𑍈𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑍈𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑍍𑌵𑌯𑌪𑌾𑌨𑍁𑌤𑌾𑌶𑌕𑌾𑌮𑌿𑌕𑍇𑌨 𑌸𑌹𑌜𑌮𑌤𑌾𑌯𑌮𑌸𑍍𑌤𑍁𑌤𑌾𑌂 𑌭𑌜𑍇𑌤𑍈𑌵𑌂। 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑌥𑌾 𑌕𑍇𑌵𑌲𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂। 𑌇𑌨𑍍𑌦𑍁𑌃।

𑌭𑌾𑌷𑌾𑌨𑍍𑌤𑌰𑍀𑌕𑍃𑌤𑌂।

𑌮𑌤𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌤𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌶𑍍𑌚 (𑌅𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌃

𑌅𑌥 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌨𑌿𑌜𑌶𑌿𑌷𑍍𑌯𑌵𑍃𑌨𑍍𑌦𑍈𑌃 𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯 𑌤𑍁𑌙𑍍𑌗𑌾𑌤𑍀𑌰𑌂 𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌪𑌥𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍀𑌂 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌂। 𑌤𑌤𑍍𑌰 𑌪𑌦𑌪𑌦𑍍𑌮𑍇𑌷𑍁 𑌦𑍇𑌵𑌾𑌲𑌯𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑌂 𑌚𑌿𑌰𑌸𑍍𑌯 𑌜𑍀𑌰𑍍𑌣𑌮𑌿𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 𑌏𑌕𑌾𑌮𑍍𑌰𑌨𑌾𑌥 𑌕𑌾𑌮𑌾𑌕𑍍𑌷𑍀 𑌵𑌰𑌦𑍇𑌶𑌾𑌨𑌾𑌂, 𑌤𑌤𑍍𑌪𑍁𑌨𑌰𑍍𑌨𑌵𑍀𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌨𑌾𑌃, 𑌤𑌦𑌾𑌨𑍀𑌨𑍍𑌤𑌨𑍇𑌨 𑌰𑌾𑌜𑌸𑍇𑌨𑌾𑌭𑌿𑌧𑍇𑌨 𑌭𑍂𑌪𑍇𑌨, 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌪𑌯𑌨𑍍𑌨𑍂𑌤𑌨𑌂, 𑌆𑌲𑌯𑌤𑍍𑌰𑌯𑌂 𑌭𑌗𑌵𑌤𑍀𑌮𑍁𑌗𑍍𑌰𑌕𑌲𑌾𑌂 𑌕𑌾𑌮𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌸𑌮𑌭𑌿𑌷𑍍𑌟𑍁𑌤𑌃, 𑌪𑍌𑌰𑍈𑌃, 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌪𑌯𑍋𑌨𑌿𑌧𑍇𑌰𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌸𑍍𑌯 𑌤𑍀𑌰𑌂 𑌪𑌰𑌾𑌮𑍃𑌶𑍍𑌯 𑌵𑌿𑌜𑌿𑌤𑍍𑌯 𑌦𑍇𑌶𑌾𑌨𑍍 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌭𑌿𑌃 𑌪𑌾𑌰𑌾𑌵𑌾𑌰𑌸𑍍𑌯 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌸𑍍𑌯 𑌤𑍀𑌰𑌮𑌨𑍁𑌸𑌰𑌨𑍍, 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌦𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌕𑌾𑌰𑌵𑌿𑌜𑌯𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍀 𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌵𑌾𑌨𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌂 𑌦𑌿𑌶𑌂। 𑌯𑌤𑍍𑌰 𑌪𑌵𑌿𑌰𑍇𑌣 𑌵𑌿𑌵𑌾𑌦𑍇𑌕𑌦𑌨𑍍𑌭𑍍𑌰𑌹𑍍𑌮 𑌷𑌾𑌰𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑍇 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌸𑌮𑌸𑍍𑌤𑌵𑌿𑌵𑌾𑌦𑌭𑌾𑌷𑍇 𑌶𑍍𑌰𑍀𑌭𑌷𑍇, 𑌸𑌮𑌾𑌰𑍁𑌰𑍋𑌹 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌪𑍀𑌠𑌂। 𑌅𑌥 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌚𑌾𑌰𑌾𑌯𑍋𑌪𑌾𑌯𑌭𑍂𑌤𑌾𑌨𑍍 𑌮𑌹𑌾𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌨𑍍 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌵𑌾𑌨𑍍। 𑌶𑍍𑌰𑍀𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥 𑌶𑍍𑌰𑍀𑌶𑍃𑌙𑍍𑌗𑌗𑌿𑌰𑌿 𑌶𑍍𑌰𑍀𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌾 𑌶𑍍𑌰𑍀𑌬𑌦𑌰𑌿𑌕𑌾𑌖𑍍𑌯𑌚𑌤𑍁𑌰𑍍𑌷𑍁। 𑌶𑍍𑌰𑍀𑌪𑌦𑍍𑌮𑌪𑌾𑌦 𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌰𑍇𑌶𑍍𑌵𑌰 𑌶𑍍𑌰𑍀𑌹𑌸𑍍𑌤𑌾𑌮𑌲𑌕 𑌶𑍍𑌰𑍀𑌤𑍋𑌟𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌮𑍇𑌤𑍇𑌷𑍍𑌵𑌧𑌿𑌕𑌾𑌰𑌾𑌨𑍍। 𑌅𑌨𑍍𑌵𑌶𑌾𑌸𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌨𑍍 𑌵𑌾𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌕𑌕𑌾𑌰𑌾𑌪𑌰𑌨𑌾𑌮𑌧𑍇𑌯𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌸𑍁𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍂𑌰𑍍𑌧𑌨𑍍𑌯𑌾𑌨𑍍 𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑌯𑌾𑌮𑌾𑌸 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃।

𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌾 𑌬𑌹𑌵𑌃, 𑌕𑌿𑌮𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃, 𑌯𑌤𑍍𑌰 𑌕𑌾𑌂𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌾𑌨𑌨𑍁𑌸𑌨𑍍𑌦𑌧𑍍𑌮𑌹𑍇 𑌤𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌵𑌿𑌷𑌯𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌂। 𑌤𑌤𑍍𑌰 𑌹𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌭𑌾𑌷𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌕𑍃𑌤𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌂; 𑌯𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌮𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵 𑌸𑌮𑌨𑍍𑌵𑌯𑌃 𑌕𑍃𑌤𑌃 𑌪𑌰𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌤𑌦𑍍𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑌾𑌂 𑌮𑌤𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌰𑌾𑌕𑌰𑌣𑌂, 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌵𑌾𑌸𑌨𑌾𑌯𑌾𑌂 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌃। 𑌜𑍀𑌵𑌾𑌦𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌰𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌭𑌗𑌵𑌦𑍍𑌬𑌾𑌦𑌰𑌾𑌯𑌣𑌮𑍁𑌨𑌿𑌪𑌦𑌨𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌜𑌯𑍇 𑌸𑌶𑍋𑌭𑌾𑌯𑌿𑌤𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌗𑌣𑌸𑍍𑌯। 𑌤𑌥𑍇𑌶𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌦𑌶𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌂 𑌭𑌾𑌷𑍍𑌯𑌾𑌣𑌿। 𑌤𑌾𑌸𑍍𑌤𑌾

நின்றே யறியவேண்டும். வீட்டினை யறியவேண்டுவான் வீட்டிற்கு வேறாய்நின்றே யறியவேண்டும். இவ்வாறே யெவற்றினையுமுணர்கின்றாம். அற்றேல், உலகத்தையறிய வேண்டுவான் உலகினுக்கு வேறாய்நின்றே யறியவேண்டும். அவ்வாறு கண்டுரைத்தா ரொருவருமிலர். காண்பவர் சமட்டியான உலக அமிசவியட்டிசரீரத்தைக்கொண் டுணர்கிற்கின்றமையான் அது வேறுபட்டுணர்ந்ததாக யாங்ஙனம் கூறற்கிடனாகும்? அசத்தியமான சொப்பன சகத்தின்கண் அச்சகத்தின் அமிச அசத்திய சரீரங்கொண்டு அச்சகத்தை யாண்டுக் காணுந் துணையும் அது சத்தியமாகவே நிகழினும் அச்சகத்தினையும் அச்சகத்தின் அமிச சரீரத்தினையும் விட்டு வேறாயிருக்கு மிஞ்ஞான்று தோன்றாது பொய்யாகப் போந்ததின்றா? சொப்பனாவத்தையின்கண் சொப்பனசகத்தைச் சத்தியமாகக் காணினும் காணாமஞ்ஞான்று மச்சொப்பனசகம் யாங்ஙனமித்தையோ அங்ஙனமே இச்சகத்தினையும் இச்சகத்தின் அமிசமான சரீரத்தைக்கொண்டு காணுந்துணையும் சத்தியமாகத் தோற்றினு மங்ஙனமே இச்சகமு மித்தையென்றுரைப்பதேனடாது? இதனானே ஒரு பொருளினை யறியவேண்டின் அறிபவன் வேறாயிருந்தே யுணரவேண்டுமென்றும், அங்ஙனமின்றி யதுவாயிருந்துணர்தல் பொய்யுமெய்யுமாகத் தோற்றுமென்றுங் கூறியவாறாயிற்று.

ஒரு பொருளினை யுளதிலதென்றாராயுங்கால் அப்பொருளினோர்பால் மற்றோர் பாலினோடுற்றறிதலானே யுளதெனக் கோட லெவ்வாற்றானுமமையாது. அங்ஙனங் கொள்ளுங்கால் கானனீரினலை மற்றோரலையொடு பொருந்துவதனானே அக்கானனீருமுண்டெனக்கொள்ளவரும். இங்ஙனமே யுலகத்தினோர்பகுதி மற்றோர்பகுதியினோடு பொருந்துமாற்றானே அறிஞருலகைச் சத்தென்றோதாரென்க.

இவையனைத்தும் நியாயமேனுங் கண்கூடாகக் கடத்தை வனைந்த நிமித்தகாரணனான குலாலனையும், துணைக்காரணமாய தண்டசக்கரங்களையும் எவ்வாற்றான அசத்தியமாகக் கூறற்பாற்றெனின், குலாலனையுந் தண்டசக்கரங்களையுங் காரியகாரண பக்கமாயாரையுமிடத்துப் பொய்யாக முடிகின்றதன்றோ? சொப்பனத்தின்கண் குலாலன் தண்டசக்கரங்களைக்கொண்டு கடமுதலன வனையக்காணினுங் குலாலனுந் தண்டசக்கரங்களுமவற்றினுக்குபாதான காரணமான சகமு மியாங்ஙனம் பொய்யாமோ அங்ஙனமேயிஞ்ஞான்றும் பொய்யென்னாமை யாதுபற்றியென்க. இதனானே யுலகமென்பதசத்தென்றே துணிதற்பாற்றென்க.

இந்து.

மதமும், அதின்பிரயோசனமும், அதின் ஆசிரியரும்.

[தொடர்ச்சி]

பின்பு பகவத்பாதாசாரியர் துங்காதீரத்தைவிட்டுத் தெற்குநோக்கிக் காஞ்சிமாநகரை யடைந்தனர். அவ்விடத்தில் ஏகாம்பரநாதன், ஸ்ரீகாமாக்ஷி, வரதராஜன் இம்மூவர்களின் ஆலயங்கள் பழுதுற்றிருத்தலைக்கண்டு அக்காலத்து அதனையாளும் ராஜசேன மன்னனைக்கொண்டு திருப்பணி செய்வித்து, உக்கிரகலையைப்பொருந்திய தேவியாரை யந்திரத்திலமைத்து, புலவர்கள் புகழத் தென்தேசங்களையெல்லாம் ஜெயித்து மே

[illegible] 30000 [illegible]

[illegible]

[illegible]

ல்சமுத்திரக் கரைவழியாய் வடக்கே காஸ்மீரஞ்சென்று, அவ்விடத்திற் கண்டனகாரனென்னும் ஸ்ரீஹருஷகவியைவென்று சர்வஞ்ஞபீடமேறி, தான் ஸ்தாபித்த சித்தாந்தம் மாறுது காப்பாற்றும் பொருட்டு ஜகன்னாதத்தில் பத்மபாதரையும், சிருங்ககிரியில் சுரேசுரரையும், துவாரகையில் ஹஸ்தாமலகரையும், பதரிகையில் தோடகாசாரியரையும், ஸ்தாபித்து நான்கு வருணங்களேயும் காக்கும்படி சுரேஸ்வராசாரியரை ஆஞ்ஞாயித்துத் திருக்கைலே சென்றனர். அவர் வயது - 32 அவரியற்றியகிரந்தங்கள் அநேகமுண்டு; அவற்றுள்முக்கியமானசிலவற்றை இங்குகூறவாம். பாஷியங்களில் பிரமசூத்திரபாஷியம் என்பது அத்துவீதிகளின் அருமைப்பொருளாய்நின்று வேறுமதங்களே மறுக்கவும், உபநிடதங்களைப் பொருட்படுத்தியதனது சித்தாந்தத்தை நிலைநாட்டவும் கருவியாயுள்ளது; வியாசமுனிவர் சூத்திரங்களுக்கும் உரையாயுள்ளது. ஈசம் முதலிய உபநிடதங்கள் ௰-க்கும் மற்றுமுள்ள சுவேதாச்சுவதரம், நரசிம்மதாபினி முதலியவற்றிற்கும் பாஷியங்கள் நன்கு எழுதப்பட்டிருக்கின்றன. அவை - ௰௫. இராஜயோகபாஷியம், கீதாபாஷியம், ஸஹச்சிரநாமபாஷியம், உத்தரகீதாபாஷியம், சனத்ஸுஜாதீயபாஷியம் என்னுமிவற்றினையுஞ்சேர்த்து எண்ணிற் பாஷியங்கள் - ௨0. கிரந்தசங்கியை சுமார் - ௫0000.

இன்னும்வரும்.

பி - யா.

ஒற்றுமை

ப்ரம்மவிந்தியா என்னுந் திருநாமம்பூண்ட பத்திரமே! இதுகாறும் எனது கண்களிரண்டும் கீர்வாணபாஷா பத்திரிகையைக் காணவிரும்பி எங்குந்திரிந்து, கானனீரைக்கண்ட மிருகம்போற் காலங்கழித்து வந்தன. இப்பொழுது மேகத்தைக்கண்ட மயில்போலவும், இளம் வெயிற்கண்ட தாமரைமலர் போலவும் உன்னைக்கண்டு மகிழ்ந்தன. நீ முன்னுரைத்தபடி நம்மவர்க்கு ஒற்றுமை வேண்டியதே; அதுவே நமது மதஜாதிகளுக்குப்பலம்; அதை நம்மவர்விட்டுப் பிற ராஜாங்கத்திலகப்பட்டு, வேறு ராஜ்ஜியத்து மனிதரிடம் சிக்கி வேடன்கை மிருகம்போன்று அவஸ்தையை அடைகிறோம். நமக்குத் தோன்றுவது இது. நமக்குள் துவிதம், அத்துவிதம், விசிட்டாத்துவிதம் என்று பலபேதங்களுண்டாயினும், அவற்றுள் உள் வேற்றுமைகள் அநேகம் இருப்பினும், அவைகளைக்காட்டாது தத்தம் மதத்தின் நுட்பவிஷயங்களை மாத்திரம் எடுத்துரைக்கப்படுமாயின் அதுவே போதுமானது. சிலர் அபிப்பிராயம் மற்றவர் மதத்தை மறுக்காது நமது மதம் நிலைபெறுமென்பது. ஆயினும் கல்விமான்கள் இருவகையுங்கண்டு தக்க நியாயத்தையறிவார். அப்பகுத்தறிவில்லாதவர் பத்திரிகாதிகாரிகளேயல்லர்; அவர்களால் யாது பிரயோசனம்? அதுகொண்டு வைதிக சித்தாந்தங்களைப் போதிக்க வல்லவராய வித்துவான்கள் தத்தமதங்கள் ரகசியங்களை இப்பத்திரிகையில் எழுதக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
ஒற்றுமைவிரும்பி.

மொழிபெயர்ப்பு.

Printed, and Published for the Proprietor at the BRAHMAVIDYA Press (Chidambaram).

கையொப்பக்காரர்களுக்கு ஓர்அறிவித்தல்.

பத்திரிகை அனுப்பப்பட்டு மூன்றுமாச மாயினமையால் கையொப்பக்காரர்கள் தயவுசெய்து சந்தா தொகையைச் சீக்கிரத்திலனுப்பும்படி கோருகிறேன்.

கையொப்பவரவு

ம-ள-ள-ஸ்ரீ

	பெயர்	ஊர்	வரவு ரூ	அ
,,	அனந்தையர் அவர்கள்	அதமன்கோட்டை	1	12
,,	வெங்கடேசய்யங்கார்	திம்பாச்சிபுரம்	0	5
,,	சுப்பராய செட்டியார்	ராஜீபுரம்	1	12
,,	ஸ்ரீநிவாஸய்யங்கார்	உளுந்தூர்ப்பேட்டை	1	0
,,	முத்து நாகரத்தின முதலியார்	புதுச்சேரி	1	0
,,	இராமஸ்வாமியையர்	கொள்ளேகால்	1	0
,,	குருஸாமி அய்யர்	ராஜபுட்டாணு	0	5
,,	ஆ சிவசங்கர செட்டியார்	நத்தம்	0	14
,,	பி- எஸ். தெய்வசிகாமணி அய்யர்	திருப்பாதிரிப்புலியூர்	1	0
,,	சாம்பகணபதி சாஸ்திரிகள்	கொள்ளேகால்	0	14
,,	குமாரஸாமிப் பிள்ளை	பெகு	3	8
,,	பஞ்சநாதய்யர்	திருச்சிராப்பள்ளி	1	12
,,	என. வைத்தினாதய்யர்	ராஜயஹேமந்திரி	1	12
,,	மு. சங்கரசாஸ்திரி	நாரணம்மாள் புரம்	1	0
,,	திருவேங்கிடாசாரி	மனனார்குடி	0	9
,,	சி. ரெங்கசாமி முதலியார்	நத்தம்	1	12
,,	ஆ. சபாபதிசிவாசாரியார்	பார்வதிபுரம்	1	0
,,	ஜவந்திலங்கையர்	திருச்சிராப்பள்ளி	1	12
,,	சுப்பிரமணிய செட்டியார்	கதிரிமங்கலம்	1	12

பத்திராதிபர்